பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 79 நாள் : 10.07.2017

**மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்விக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அனைவருக்கும் கல்வி இயக்ககம் (SSA) சென்னை மாவட்டம் மூலமாக 1 வயது முதல் 18 வயது வரையுள்ள செவித்திறன் குறைபாடு, பார்வைத் திறன் குறைபாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாம் 10 மண்டலங்களில் நடைபெற உள்ளது.

இம்முகாமில் முடநீக்கு வல்லுநர், தொண்டை, காது, மூக்கு மருத்துவர், மனநல மருத்துவர், கண் மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் ஆகியோர் குழந்தைகளை பரிசோதனை செய்து மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரை செய்வார்கள்.

இம்முகாமிற்கு வருபவர்கள் குழந்தைகளின் 4 புகைப்படம், வருவாய் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றின் நகல் கொண்டு வர வேண்டும். கீழ்க்கண்ட நாட்களில் மருத்துவ முகாம்கள் இணைப்பில் உள்ளவாறு காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெற உள்ளது.

| வ. எண் | தேதி | மண்டலம் | நடைபெறும் இடம் | தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|---|
| 1 | 12.07.2017 | மண்டலம்–4, தண்டையார்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி, 13, புத்தா தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை – 21. | 97888 58510<br>90439 88081<br>91764 89291 |
| 2 | | மண்டலம்–5, இராயபுரம் | சென்னை உருது பெண்கள் தொடக்கப்பள்ளி, எண்.71, அரத்தூண் சாலை, இராயபுரம், சென்னை – 13. | 97888 58511<br>99402 71699<br>89390 54856 |
| 3 | 13.07.2017 | மண்டலம்–6, திரு.வி.க. நகர் | சென்னை தொடக்கப் பள்ளி, டி.வி.கே. நகர், பெரம்பூர், சென்னை – 11. (டி.வி.கே. நகர் பேருந்து நிலையம் அருகில்) | 97888 58513<br>98845 54932<br>97907 41543 |
| 4 | | மண்டலம்–9 தேனாம்பேட்டை | சென்னை சமுதாய கல்லூரி, 24, அருணாச்சலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5. | 97888 58515<br>96550 08261<br>89392 54871 |
| 5 | 14.07.2017 | மண்டலம்–5 இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி, வி.கே. பிள்ளை தெரு, சூளை, சென்னை – 112 | 97888 58512<br>74016 06664<br>94452 49168 |
| 6 | | மண்டலம்–10 கோடம்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, பிரகாசம் சாலை, பனகல் பார்க் அருகில், தி.நகர், சென்னை – 17. | 97888 58517<br>99402 11634<br>94453 22173 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 15.07.2017 | மண்டலம்–8<br>அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>மெக்.நிக்கோலஸ் சாலை,<br>சேத்துப்பட்டு, சென்னை – 31.<br>(சேத்துப்பட்டு பாலம் அருகில்) | 97888 58514<br>98418 89069<br>89250 67494 |
| 8 | | மண்டலம்–9<br>தேனாம்பேட்டை | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>இராமா தெரு, வள்ளுவர் கோட்டம்<br>(சுதந்திர பூங்கா அருகில்),<br>நுங்கம்பாக்கம், சென்னை – 34. | 97888 58516<br>99413 85747<br>91763 83727 |
| 9 | 17.07.2017 | மண்டலம்–10<br>கோடம்பாக்கம் | சென்னை தொடக்கப்பள்ளி,<br>4வது பிரதான சாலை,<br>சி.ஐ.டி. நகர், நந்தனம்,<br>சென்னை – 35. | 97888 58518<br>99414 40131<br>97890 81918 |
| 10 | | மண்டலம்–13<br>அடையாறு | சென்னை தொடக்கப்பள்ளி,<br>29வது குறுக்கு தெரு,<br>இந்திரா நகர், சென்னை – 20. | 97888 58519<br>94447 39977<br>90928 90370 |

மேற்குறிப்பிட்டுள்ள மருத்துவ முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**